

உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி தலைமையில் இட ஒதுக்கீட்டு போராட்டத்தில் உயிர் நீத்த 21 தியாகிகளுக்கான மணிமண்டபம் மற்றும் முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமிக்கு மணி மண்டபம் ஆகியவை அமைப்பதற்காக விழுப்புரம் ஆவின் பின்புறம் (திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலை அருகில்) உள்ள இடத்தினை நேரில் ஆய்வு செய்தார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில விவசாய தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

### பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலையில்

# நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் இளைஞரணி நிர்வாகிகள் பதவிக்கு விண்ணப்பங்கள்!

## அமைச்சர் மரு.மா.மதிவேந்தன் - கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. துவக்கி வைத்தனர்!

நாமக்கல் ஜூலை 4

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் பதவிகளுக்கு, விண்ணப்பங்கள் பெறும் நிகழ்ச்சி மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், மாநில தி.மு.க. இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் வழிகாட்டுதலின்படி, நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூராட்சி அளவில் தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர்.

ஒவ்வொரு நகரம் மற்றும் ஒன்றிய அளவில் 1 அமைப்பாளர் மற்றும் 5 துணை அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர். பேரூராட்சி அளவில் 1 இளைஞரணி அமைப்பாளர் மற்றும் 3 துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர். இந்த பதவிகளுக்கு 35 வயதுக்கு உட்பட்ட தி.மு.க.வினர் விண்ணப்பிக்கலாம்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், இளைஞரணி நிர்வாகிகள் பதவிக்கு விண்ணப்பம் பெறும் நிகழ்ச்சி துவக்க விழா மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளருக்கான விண்ணப்பங்களை வழங்கி துவக்கி வைத்தார்.

இது குறித்து நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்கவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கூறுகையில், நாமக்கல் கிழக்கு மாவட்டம் முழுவதும் உள்ள இளைஞர்கள் விண்ணப்பங்களை அளித்தனர். நகர, ஒன்றிய, பேரூராட்சி ஆகியவற்றின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பதவிக்கு விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து வயதிற்கான சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை நகல் உள்ளிட்ட விவரத்தினை இணைத்து, நாளை ஜூலை 5 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். இதற்கான விண்ணப்ப படிவங்களைப் பெற்று, காலை 9 மணிமுதல், மாலை 5 மணி வரை நாமக்கல், கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஆனந்தகுமார், மாவட்ட துணைச் செயலாளர் நலங்கிள்ளி, மாவட்டப் பொருளாளர் பாலச்சந்திரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இளம்பரிதி, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ஆனந்த் பாபு ஆகியோரிடம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வழங்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய தி.மு.க. செயலாளர்கள் வி.கே பழனிவேல், எம்.பி. கௌதம், பெ.நவலடி, ஆர். ஜெயபிரகாஷ், நகரச் செயலாளர்கள் ராணா ஆனந்த், எஸ்.பூபதி, அ.சிவகுமார், பேரூர் செயலாளர் சி.செல்லவேல், மாநில மகளிர் தொண்டரணிச் செயலாளர் ப.ராணி, நாமக்கல் நகர் மன்றத் தலைவர் து.கலாநிதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்டத்தில் புதிய பேருந்து வழித் தடம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர், ஜூலை 4 -

அரியலூர் மாவட்டம், சித்துடையார் கிராமத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் புதிய பேருந்து வழித்தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பொது மக்களின் கோரிக்கையினை ஏற்று கிராமங்கள் வரை பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் இன்றைய தினம் பொது மக்களின் கோரிக்கையினை ஏற்று சித்துடையார் கிராமத்தில் புதிய பேருந்து வழித் தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இதன் மூலம் இப்பகுதி பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட், திருச்சி மண்டலம் அரியலூர் கிளையின் மூலம் அரியலூர் திட்டக்குடி (வழி) செந்துறை, வங்காரம் வழித்தட புறநகரப் பேருந்தினை தினசரி 6 நடைகள் சித்துடையார் கிராமம் தொட்டு இயக்கம் செய்யும் வகையில் இப்பேருந்து வழித்தடம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து வசதியினை இப்பகுதி பொது மக்கள், வியாபாரிகள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் உள்ளிட்ட அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட இயக்கநர் முருகண்ணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்ப)லிட், மேலாண் இயக்குநர் எஸ்.எஸ்.ராஜ்மேகான், வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், வட்டாட்சியர் பாக்கியம் விக்டோரியா, கோட்ட மேலாளர் பெரம்பலூர் ஆர்.ராமநாதன், கழக கொள்கைப்பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, ஒன்றிய செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், காளமேகம், சிவ.பாஸ்கர், ராமராஜன், ரமணி, ஆனந்த் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### என்.இளையபெருமாள் ஏற்பாட்டில்! திருவாரூர் கலைஞர் கோட்டத்தை

# மயிலாடுதுறை தெற்கு ஒன்றியத்தில் இருந்து 350க்கும் மேற்பட்டோர் பார்வையிட்டனர்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமையில்!

நாகை, ஜூலை 4 -

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை வடக்கு ஒன்றிய தி.மு.க. வைச் சேர்ந்த 350 பேர் திருவாரூர் காட்டூர் கலைஞர் கோட்டத்தை பார்வையிட்டனர்.

கலைஞர் புகழை அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் திருவாரூர் காட்டூரில் கலைஞர் கோட்டம் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த கலைஞர் கோட்டத்தை கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்த வைத்தார்கள் இந்த கலைஞர் கோட்டத்தை மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் ஜூன் 29ம் தேதி முதல் ஜூலை 13ம் தேதி வரை மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் வாரியாகச் சென்று பார்த்திட மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் ஏற்பாடு செய்துள்ளார். இதையடுத்து மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் 350க்கும் மேற்பட்ட கழகத்தினர், தன்னார்வலர்கள், லயன்ஸ்கிளப் நிர்வாகிகள், பொதுமக்கள் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. தலைமையிலும் ஒன்றியக் கழகச் செயலாளர் என்.இளையபெருமாள் முன்னிலையில் கலைஞர் கோட்டத்தை பார்வையிட்டனர். நிகழ்ச்சியில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் செல்வமணி, தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஞான.இமையநாதன், பி.முருக மணி, ஏ.ஆர்.ராஜா, அமிர்த.விஜயகுமார், மணல்மேடு பேரூர் கழகச் செயலாளர் அண்ணாதுரை, பொதுக்குழு உறுப்பினர் பி.சிவதாஸ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மருது, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சாந்தி, மாவட்டத் தொண்டர் அணி துணை அமைப்பாளர் டெய்சி, மாவட்ட பிரதிநிதி கள் குருமூர்த்தி, தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் ராதாகிருஷ்ணன் மற்றும் ஒன்றிய, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனங்களை சேர்ந்தவர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலைஞர் கோட்டத்தை பார்வையிட்டனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள் பதவிகளுக்கு, விண்ணப்பங்கள் பெறும் நிகழ்ச்சி மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது. வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு இளைஞர் அணி விண்ணப்பங்களை வழங்கி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் மற்றும் மாநில நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தோன்ற வேண்டும் மக்கள் தோன்றாத் துணை நாதராக!

கள்ளச் சாராயச் சாவுக்கே
களத்திற்கு விரைகிறார் முதல்வர்!
அதற்குப் பிறகு
எதிர்க் கட்சித் தலைவர்
எடப்பாடி போறார்!
ஆனால் பற்றி எரிகிறது மணிப்பூர்
கள்ள மௌனத்தில்
பயணித்துக் கொண்டிருக்கிறார்
பாரதப் பிரதமர்!
ஆறுதல் தரப் போகிறவர்களுக்கும்
அனுமதி மறுப்பு!
அமைச்சரை நீக்குகிறார் ஆளுநர்
அதிகாரம் இல்லை என்கிறார் முதல்வர்!
கோப்புகளைப் போலத்
தனது ஆணையையும் தானே
நிறுத்தி வைக்கிறார் ஆளுநர்!

எப்போது கைவைப்பார்களோ
என்று
திகைப்பில் தவிக்கின்றன
அரசமைப்புச் சட்டமும்
ஜனநாயகமும்!

மாற்றப்பட வேண்டியது
அரசமைப்புச் சட்டம் இல்லை;
அதிகார ஆணவம்.

பொதுநிதி மட்டுமன்றிப்
பொது நீதியும் காக்கப்பட வேண்டும்.
அரசமைப்புச் சட்டப்படி
பொதுமக்கள் விரல் ரேகையில்
அதிகாரத்தின் ஆயுட் காலம்!

எஜமானர்களாகக் கருதாமல்
பொறுப்பான தலைவர்களாகப்
பதவிக்கு வருகிறவர்கள்
பக்குவப்பட வேண்டும்!

பதவி கொடுத்தவர்களைப்
பரிதவிக்க விட்டுவிட்டு
வெண்சாமரக் காற்று வேண்டி
வெளிநாட்டில் சுற்றுகிறார்கள் !
ஜனநாயகம் என்பது
ஏழைகளின் வாக்குகளைப் பெற்றுப்
பணக்காரர்களோடு
பயணிப்பதன்று.

நம்பிக்கைக்கும்
உண்மைக்குமான
இடைவெளியைப்
பொதுமக்கள் உணரும் காலம் இது!

நம்பிக்கை என்பது
கதைகளால் கட்டமைக்கப்பட்ட
தனிக்குழு விருப்பம்!
உண்மை என்பது சான்றுகளைக்
கொண்டு
நிறுவப்படும் சமூக நலன்!

தனிக்குழு நம்பிக்கையைச்
சமூக உண்மையாக்கி
மதத்தைக் காட்டி ஜனநாயகத்தை
வெறுப்பு அரசியலின் நெருப்புக் கடலில்
மூழ்கடிக்கிறார்கள் !

கலைஞர் கோட்டத்தைத்
திறந்து வைத்த கையோடு
ஜனநாயகக் கோட்டத்தைக்



கட்டியெழுப்பப் புறப்பட்டிருக்கிறார்
தமிழக முதல்வர்!

பாட்னா பீகார் தலைநகரம்
அஜாதசத்ரு காலத்திலிருந்தே
(கி.மு.490)
தலைநகராக இருக்கிறது!

பாட்னாவின் பழைய பெயர்
பாடலிபுத்திரம்!

சங்க காலத்திலேயே
பாடலிக்கும் தமிழுக்கும்
தொடர்பு இருந்திருக்கிறது!
கங்கைப் பகுதியில்
நிதியை மறைத்து வைத்த
நந்தர்கள் கதையைச் சொல்கிறது
அகநானூறு(265)
பொன்மலி பாடலி என்று
கொண்டாடுகிறது குறுந்தொகை(75)

கடலூர் மாவட்டத்தில் உள்ள
திருப்பாதிரிப் புலியூரின்
பழைய பெயரும் பாடலிபுத்திரம்!
பாதிரி மரத்தின் பெயர் பாடலி
ஆகியிருக்கிறது.

கங்கைக்கரை பாடலிக்கும்
கடலூர் பாதிரிக்கும் 2000 கி.மீ.
இடைவெளி!
ஆனால் கலைவளமும் தொன்மையும்
புராணமும்
நிரம்பி இருக்கும் இடங்கள்!

நெருக்கடி காலத்தில்
ஜனநாயகத்தைக் காப்பாற்றப்
போராடிய கலைஞர்தான்
இப்போதும் ஜனநாயகத்துக்குத்
தோன்றாத் துணை நாதர்!
தொல்காப்பியப் பூங்கா தந்தவருக்குத்
திருவாரூருக்கு அருகே கலைஞர்
கோட்டம்!
இருநூறு ஆண்டுகளுக்கு முன்
காணாமல் போக இருந்த
தமிழர்களின் வாழ்க்கையைச்
சொல்லும்
தொல்காப்பியப் பொருளதிகாரத்தைக்
காப்பாற்றிக் கொடுத்தது திருவாரூர்!
ஆரூரில் இருந்த வடுகநாத தேசிகர்
மட்டுமே
அப்போது தொல்காப்பியம்
அறிந்தவராக இருந்தாராம்.
அவரிடம் சென்று இரண்டு ஆண்டுகள்
ஆரூரில் தங்கிப் பயின்றவர்
வேங்கடாசல முதலியார்!
அவர் தனது மகன்
வரதப்ப முதலியாருக்குக் கற்றுக்
கொடுத்தாராம்
அவர் வழிதான் தமிழகத்தில்
தொல்காப்பியப் பொருளதிகாரம்

பரவத் தொடங்கியதாம்.
அதனால் அவர்
தொல்காப்பிய வரதப்ப முதலியார்
என்றே
அழைக்கப்பட்டார் என்று
தொல்காப்பியத்தை அச்சில்
கொண்டுவந்த
சி.வை. தாமோதரம் பிள்ளை
திருவாரூருக்கும்
தொல்காப்பியத்துக்குமான
தொடர்பை 1885-ஆம் ஆண்டே
குறிப்பிட்டிருக்கிறார்.

அங்கேதான்
ஆழித்தேரில் கலைஞரை
அமரவைத்துக்
கலைஞர் கோட்டத்தைக்
கட்டி எழுப்பியிருக்கிறார் முதல்வர்!
அவர்தான் தமிழுக்கும்
இப்போது தோன்றாத் துணை நாதர்!
ஆட்சியில் இருந்தவன் சமயக் காழ்ப்பில்
கல்லில் கட்டிக் கடலில் தூக்கி எறிந்த
திருநாவுக்கரசர் கரையேறியது
கதையாக இருந்தாலும்
“கரையேறவிட்ட குப்பம்”
இப்போதும் இருக்கிறது
திருப்பாதிரிப் புலியூரில் !

அப்பரும் சம்பந்தரும் பாடிய
திருப்பாதிரிப் புலியூர் இறைவன்
தோன்றாத் துணை நாதர்!
மத வெறுப்புக் கடலில்
மூழ்கடிக்கப்படும் ஜனநாயகத்தை
வருகிற தேர்தலில் கரையேற்றத்
தோன்ற வேண்டும் மக்கள்
தோன்றாத் துணை நாதராக!



அன்புடன்
**ம.ரா.**

நன்றி :
**கணையாழி**

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டினையொட்டி - கோவை

# கவுண்டம்பாளையம் - அண்ணா நகரில் மரக்கன்றுகள் நடும் விழா!

## மரக்கன்றுகள் நலச்சங்கங்கள் சார்பில் நடப்பட்டன!

கோவை, ஜூலை 4 -

கோவை வடக்கு மாவட்டம் கவுண்டம்பாளையம் பகுதியில் அமைந்துள்ள அண்ணாநகரில், இன்றைய தினம் , தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டினை ஒட்டி ஓய்வறியா சூரியன், எழுச்சி மிக்க கழகத் தலைவரும் தமிழ்நாட்டி ன் முதலமைச்சருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் அன்பு கட்டளைக் கிணங்க,, தொடர்ந்து 13 வது வாரமாக, மரம் நடுவிழா அண்ணாநகரில் உள்ள தண்ணீர் மேல்நிலை தொட்டி அருகில், மரக்கன்றுகள் நலச் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பாக நடப்பட்டன.

அனைத்து நலச் சங்கங்களின் நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள், அரிமா சங்கத்தினர், ரோட்டரி சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்வில் நல சங்கங்களின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளரும், 35-ஆவது வட்டக் கழக அவைத் தலைவர் சோ.துரைப்பாண்டியன் ஏற்பாட்டில், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளரும் கோவை மாநகராட்சியின் கல்வி பூங்கா விளையாட்டு மைதானங்களின் குழு தலைவரும் மாமன்ற உறுப்பினருமான திருமதி மாலதி தலைமையில், அனைத்து வகை மரக்கன்றுகளும் நடப்பட்டன..

இந்நிகழ்வில் மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவையின் துணை அமைப்பாளரும், மூத்த முன்னோடியுமான கா. பொன்னரசு மற்றும் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளரும் வட்டக் கழக பி எல் ஏ 2 ஆற்றல்மிகு ஆலிஸ் பிரசன்னா, காவல் துணை ஆய்வாளர்( ஓய்வு) மதிவாணன் ஆகியோர் முன்னிலையில், மகளிர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் உமா சங்கரி, வர்த்தக அணி அரிமா குமரேசன் , தொண்டரணி மோகன் குமார், வர்த்தக அணி ராம் குமார், இளைஞர் அணி விக்னேஷ், வர்த்தக அணி ரவி முரசு, ஐடிவிங் இ சேவை மையம் மோகன்ராஜ், ஆட்டோ நகர் மூத்த முன்னோடி வீரப்பன், மார்க்கெட் தயானந்தன், அரிமா சந்திரலிங்கம், முன்னாள் வட்டக் கழக பிரதிநிதி குமார், அன்பு நகர் அக்ரி ஆபிசர் குமரன், விவசாய கல்லூரியின் முன்னாள் டீன் இள முருகு, சிவா டிஸ்டிலரீஸ் ராஜேந்திரன், இளைஞர் அணி சஞ்சய், ரமேஷ், மகளிர் அணி பஞ்சு, லீலா, பிரியங்கா மாணிக்கராஜ், லிங்கம், வரதராஜ், கால்வின், ஐடி விங் கார்லின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கோவை வடக்கு மாவட்டம் கவுண்டம்பாளையம் பகுதிக்கு உட்பட்ட, அண்ணா நகர் வீட்டு வசதி வாரிய குடியிருப்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டினை ஒட்டி , 13 வது நிகழ்வாக நலச் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பாக மரக்கன்றுகள் நடும் விழா, 35வது வட்டக் கழக அவைத் தலைவர் சோ. துரைப்பாண்டியனின் ஏற்பாட்டில், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளரும் மாநகராட்சி கல்விக் குழுவின் தலைவரும் மாமன்ற உறுப்பினருமான திருமதி மாலதி தலைமை ஏற்க, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் துணை அமைப்பாளர் கா. பொன்னரசு, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் ஆலிஸ் பிரசன்னா, காவல் துணை ஆய்வாளர் (ஓய்வு) மதிவாணன் ஆகியோர் முன்னிலை வகிக்க நடைபெற்றது. இதில் தொண்டரணி மோகன் குமார், அன்பு நகர் குமரன், வர்த்தக அணி ராம்குமார், மகளிர் மாவட்ட துணை அமைப்பாளர் உமா சங்கரி, ஆட்டோ நகர் வீரப்பன், இளைஞர் அணி விக்னேஷ், ஐ.டி.விங் மோகன்ராஜ், அரிமா சந்திரலிங்கம் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.